# தமிழ்ச்சிட்டு

குரல்: 1 - இசை: 7




தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்



# உங்கள் மடல்கள்

o 'தமிழ்ச்சிட்டு' மாணவர் ஒவ்வொருவரின் கையிலும் இருக்க வேண்டிய 'மாணவச்சிட்டு' என்றே கூறலாம். இதைப்போன்ற இதழ்களை மாணவர்களாகிய நாங்கள் படித்துத், தமிழ்மொழி ஆர்வத்தை வளர்த்துக்கொள்ள உதவும் உதவிக்கு நாங்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

கு. பாண்டுரங்கன், பள்ளியிறுதிவகுப்பு. அ. உ. சாத்தனூர்.

o 'தமிழ்ச்சிட்டு' பறக்கும் திசைதொறும் தமிழ் பரவும், 'தென்மொழி'யும் 'தமிழ்ச்சிட்டும் எண்ண இனிக்கும் இன்னமுதாய் – மாணவர் தம் உள்ளங்களில் மறைந்து கிடக்கும் தமிழார்வம் கிளர்ந்தெழ, மலைமேல் ஏற்றிய நந்தாவிளக்காய் – கருத்துக் கருவூலமாய் – சிறப்புற்று விளங்குகின்றன.

சு. சுந்தர சுப்பிரமணியன் 53/54 பெரியதெரு. சென்னை–5.

o தமிழ் என்பது கடல். அதில் எழுந்திடும் பரிதியே தென்மொழியும் தமிழ்ச்சிட்டும்! தமிழ் என்பது சங்கு. அஃது எழுப்பிடும் முழக்கமே தென்மொழியும், தமிழ்ச்சிட்டும். தமிழ் என்பது சந்தனம்! அதில் வீசும் மணமே தென்மொழியும், தமிழ்ச்சிட்டும்! தமிழ் என்பது கண்கள்! அவற்றின் பார்வைபோன்றன தென்மொழியும் தமிழ்ச்சிட்டும். பரிதியைப்போன்றும் மதியைப்போன்றும் இவ்விரண்டு இதழ்களும் மடநெஞ்சுடைய சிறுர்களின் மருளை நீக்கி அருளூட்டும் அருந்தமிழ் ஏடுகளாய் இலங்குதல் கண்டு இறும்பூதடைகின்றேன். வாழ்க நீவிர்! வளர்க தமிழ்!

இரா. கயல்விழி. தரனூர். அங்காடி மறுகு, சங்கராபுரம்.

o கலப்புத் தமிழைப் படித்தும், கேட்டும், பேசியும் வரும் இந்நிலையில் 'பாலை நிலத்தில் இளநீர் பருகியதுபோல்' தோன்றும் உணர்வு, 'தமிழ்ச்சிட்டை'க் காணும்பொழுது உணர்கிறோம். இவ்வளவு எளிமையும் தெளிவும் கலந்து 'தமிழ்ச்சிட்டு' பறந்து வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. பக்கங்கள் குறைவு என்றாலும் பயன் நிறைய உண்டு. சிறுவர் இதழ் உலகில் தமிழ்ச்சிட்டு ஒரு புரட்சி இதழ்! இதைக் கிழமையிதழாக மலரும்படி செய்யவும்.

சி. பூ. மணி, 66. சுதந்திரநகர், சீராம்புரம். பெங்களூர்–21.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-1 | தி. பி. [illegible] கும்பம் (மாசி) பிப்ரவரி | இசை-7.


## ஓய்வை வீணாக்காதீர்கள் !

'கல்வி கரையில; கற்பவை நாள் சில' என்பது முத்தோர் மொழி. நம் வாழ்நாள் மிகவும் குறுகியது. அதில் ஏறத்தாழ அரைப் பகுதியை நாம் உறக்கத்திலும், காற்பகுதியை அறியாமை நிறைந்த குழந்தைப் பருவத்திலும், இயலாமை மிகுந்த முதுமைப்பருவத்திலும், கழித்து விடுகின்றோம்.

எஞ்சியுள்ள மிகுதி நாட்களில் பெரும்பகுதி அன்றாடம் உடுத்தவும், உண்ணவும், உணவு தேடவுமே கழிந்து போகின்றது. மிகுதியாக உள்ள மிகச் சிறிய காலத்தில்தான், நாம் அறிவைத் தேட வேண்டும்; அறிவைப் பரப்ப வேண்டும்; பண்பாடு பெற வேண்டும்; மாந்தராக வாழ வேண்டும்; பொதுத்தொண்டு செய்தல் வேண்டும்; புகழோடு சாதல் வேண்டும்.


பொறுப்பாசிரியர் :- பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர் :- இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

இவ்வளவையும் கண்களை மூடிக்கொண்டு ஒர் இமைப்பொழுது நினைத்துப் பாருங்கள். இன்னும் நாம் செய்ய வேண்டுவது எவ்வளவு? செய்தது எவ்வளவு? என்று எண்ணினால் நாம் செய்து கொண்டிருப்பது எவ்வளவு குறைவு என்பது நமக்குத் தெரியும்.

குழந்தைகளே! இந் நிலைகளையெல்லாம் நீங்கள் இவ் விளமைப் பொழுதிலிருந்தே உணரத்தொடங்கி, உங்களுக்குக் கிடைக்கின்ற நேரங்களையெல்லாம் பயனான வழிகளில் செலவிட்டு வருவீர்களானால், உங்கள் வாழ்நாளின் முடிவு உங்களுக்குப் பெருமை அளிப்பதாகவும் புகழ் தருவதாகவும் இருக்கும் என்பதில் ஐயமே இல்லை.

பெரும்பாலும் நீங்கள் சிறுவர்களா யிருக்கையில், உங்களுக்கான உணவு, உடை முதலியவற்றைத் தேடுவதில், உங்கள் பெற்றோரே ஈடுபட்டு விடுவதால், நீங்கள் உங்களுக்குக் கிடைக்கும் முழுநேரத்தையும் கல்வியிலும், பிற பயனுடைய முயற்சிகளிலும் செலவிடலாம் அன்றோ? இதனாலன்றோ 'இளமையில் கல்' என்று நம் முன்னோர்களும் நமக்குக் கட்டளை இட்டார்கள்.

பள்ளிக்கூடத்தில் நாம் கல்வி கற்கின்ற நேரம் போக மிகுதியுள்ள நேரத்தை எப்படி எப்படிக் கழித்து வருகின்றோம் என்பதை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். பெண் பிள்ளைகளில் சிலர் தம்தம் தாய்மார்களுக்கும், ஆண் பிள்ளைகளில் சிலர் தம் தம் தந்தைமார்களுக்கும் சில நேரங்களில் உதவியாக இருக்கலாம். அந்நேரங்கள் போக மிகுதியுள்ள நேரங்களில் சிறுவர்கள் பலரும் ஊர் சுற்றுவதும், கூடத்தகாத சிறுவர்கள் சிலரிடம் கூடிக்கொண்டு, பேசத்தகாத வீண் பேச்சுகளில் காலத்தைப் போக்குவதும் எங்கும் காணப்படும் செயல்கள். இச் செயல்களில் பண்பட்ட, உயர்ந்த குடும்பத்துப் பிள்ளைகள் பெரும்பாலும் ஈடுபடுவதில்லை. என்றாலும் இளமை எச்செயலும் செய்யும்' என்பதற்கிணங்க, சில பொழுதுகளில் அவர்களும் எச்சரிக்கையாக இல்லாமற் போவார்களாயின், அவர்கள் போக்கும் கூடத் தாழ்ந்து இழிவான நிலைக்கு வந்துவிடுவதும் உண்டு.

சிறுவர்களே! நாம் இளமையிலிருந்தே நல்லனவற்றில் நம்முடைய உள்ளத்தையும் அறிவையும் செலுத்தாமற் போவோமானால், நம் வாழ்க்கை கற்பாறையில் விழுந்த கண்ணாடிக் குவளைபோல் நொறுங்கிப் போகும். மண்ணில் கறந்த பால் போல் வீணாகிவிடும். காட்டில் மலர்ந்த மலர் போல் பயனற்றுப் போய் விடும்.

நம் நாட்டில் உள்ள மக்களில் பலரும் பிற மக்களைப்பற்றிக் கவலைப்படாமலும், பலவகையான பொதுநலக் கேடுகள் செய்து கொண்டும் நிலத்துக்குக் கேடாக வாழ்வதைப் பார்த்தால், இவர்களின் இளமைப் பருவம் எப்படி வீணாகக் கழிக்கப்பட்டிருக்கும் என்பதை நீங்கள் உய்த்துணரலாம். அவர்களில் சிலர் மட்டும் அறிவுடையவர்களாக நாட்டு மக்களால் பாராட்டப் படுவதையும், பலர் தெய்வங்களாக வணங்கப் படுவதையும் பார்த்தால், அவர்கள் தங்கள் தங்கள் இளமைப் பொழுதுகளில் எவ்வாறு விழிப்புடன் இருந்து வந்தவர்கள் என்பதும் விளங்கும்.

முதுமையின் மலர்ச்சி இளமையின் வளர்ச்சி அமைப்பைப் பொறுத்தே அமையும். ஆதலால்தான் பெரியோர்கள் 'வளரும் பயிர் முளையிலே தெரியும்' என்றார்கள். எனவே, நீங்கள் உங்கள் கல்வி நேரம் போக, எஞ்சிய ஓய்வு நேரத்தில் உங்கள் மனவளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் உகந்த செயல்களில் ஈடுபடுங்கள். கிடைக்கின்ற ஓய்வுப் பொழுதுகளில் ஓவியம் வரைந்து பழகுங்கள்; இசைக்கருவிகளை இசைத்துப் பழகுங்கள்; பாட்டுகள் எழுதிப் பழகுங்கள்; கதைகள் எழுதிப் பழகுங்கள்; நூல் நிலையங்களுக்குச் சென்று நம் நாட்டு, பிற நாட்டு அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளையும், அவர்தம் அரிய கருத்துகளையும் படித்துவாருங்கள். நாள்தோறும் செய்தித்தாள்களில் வரும் நாட்டு நடப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். விடுமுறை நாட்களில் உங்களுக்கு அன்புடனும் பரிவுடனும் அறிவு புகட்டக்கூடிய ஆசிரியர்களுக்கு அவர் வேலைகளில் துணையாக இருந்து, அவர் மனமுவந்து கற்பிக்கும் நல்ல அறிவுரைகளை மனத்தில் பதியவைத்துக் கொள்ளுங்கள்.

'இளமை அறிவோடு இயைந்தால், நாட்டுக்கு விளைவதெல்லாம் நன்மையே' என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறுகின்றார். சிறுவர்களாக இருக்கின்ற பொழுது நாம் அடைகின்ற செப்பத்தைப் பொறுத்தே பிற்காலத்து நம் வாழ்க்கை அமைகின்றது. நம்மைப் பொறுத்தே நம் நாடு அமைகின்றது. நாம் செப்பமில்லாதவர்களாக இருந்தால் நாடும் செப்பமாக இராது; வீடும் விளக்கமுற இருக்காது. எனவே உங்களுக்குக் கிடைக்கும் சிறு சிறு நேர ஓய்வையும், வீணாகக் கழிக்காமல் உங்கள் உள்ளத்தையும் அறிவையும் வாழ்வையும் வளப்படுத்தும் பயனுள்ள வேலைகளில் ஈடுபட்டு மாந்தராக வாழ முற்படுங்கள்.




## 'மேக்னிலன் ரூப்'

நம் நாட்டில் எம். எசு. பூரணலிங்கம் என்னும் அறிஞர் ஒருவர் இருந்தார். அவர் தமிழ் மொழியிலும் ஆங்கிலத்திலும் மிகுந்த வல்லமை படைத்தவர். அவர் அரிய ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்,

அவர் திருச்சியில் உள்ள கல்லூரி ஒன்றில் இடை நிலை (INTERMEDIATE) வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். பூரணலிங்கம் சிறுவராய் இருக்கும் பொழுதிலிருந்தே ஆங்கில மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் கற்றிருந்தார். இயற்கையிலேயே அவர் கூரிய அறிவு படைத்தவராக விருந்தமையால், எல்லாப் பாடங்களையும் ஆசிரியர் உதவியின்றித் தாமே எளிதாகக் கற்று வரலானார்.

அவர் படித்துக் கொண்டிருந்த ஆங்கிலச் செய்யுள் பொத்தகத்தில் உள்ள செய்யுள்களுக்கு அவருக்கு எளிதே பொருள் விளங்கிற்று. என்றாலும் அவர் வகுப்பில் உள்ள மாணவர்கள் அச் செய்யுள்கள் மிகவும் கடினமாக இருப்பதாகக் குறைபட்டுக் கொண்டனர். அக்காலத்தில் அந்நூலிற்குப் பல குறிப்பு நூல்களும் (NOTES) வெளி வந்திருந்தன. எனினும் அவை யாவும் சரியானபடி மாணவர்களால் விளங்கிக் கொள்ள முடியாதனவாகவே இருந்தன.

பூரணலிங்கம் அச் செய்யுள் நூல் முழுவதற்கும் தமக்குத்தெரிந்த குறிப்புரைகளையும் பொருளுரைகளையும் ஒரு நூலாக எழுதி முடித்தார். அக் குறிப்பு நூலை அவர் அச்சிட்டுப் பிற மாணவர்களுக்கும் உதவ எண்ணினார். ஆனால் அந் நூலை அவர் எழுதினார் என்றால், அவரை ஒத்த மாணவர்களும் ஆசிரியர்களும் அதை மதிக்காமலும் நம்பாம

லும் போகலாம் என்று எண்ணினர். மேலும் தாம் படித்துத் தேர வேண்டிய செய்யுள் நூலுக்குத் தாமே உரையெழுதியதாகச் சொன்னால் அந் நூலை எந்தப் பதிப்பகமும் அச்சிட்டுத்தராமல் போனால் என்ன செய்வது? எனவே அந் நூலை நன்றாகப் படியெடுத்து அதன்மேல் அதை எழுதிய ஆசிரியர் மேக்னிலன் ரூப் (MAGNILAN ROOP) என்று குறித்தார். 'மேக்னிலன் ரூப்' என்னும் பெயர் அவர் பெயராகிய பூரணலிங்கம் (POORNALINGAM) என்ற பெயரை ஆங்கிலத்தில் தலை கீழாக எழுதிய பெயராகும்.

பதிப்பகத்தாரும் அப்பெயரையும், அந்நூலையும் பார்த்துவிட்டு அந் நூல் சிறந்த ஓர் ஆங்கிலப் பேராசிரியரால் எழுதப்பட்டது போலும் என்று நினைத்து அதனை வெளியிட்டு, அவருக்கு அதற்குரிய அன்பளிப்புத் தொகையையும் அனுப்பிவைத்தனர்.


நாளடைவில் 'மேக்னிலன் ரூப்' எழுதிய குறிப்பு நூலையே எல்லா மாணவர்களும் வாங்கிப் படித்தனர். ஆசிரியர்களும் நூல் மிகவும் சிறப்பாக எழுதப் பெற்றுள்ளது என்று போற்றி, மாணவர்கள் எல்லாரையும் வாங்கும்படி செய்தனர். பூரணலிங்கத்தின் ஆங்கிலப் பேராசிரியர் பூரணலிங்கத்திடமே அப் பொத்தகத்தைப் போற்றியுரைத்து அவரையும் வாங்கிப்படிக்குமாறு கூறினர் என்றால் அவ்வுரை நூலின் பெருமையை என்னென்பது?

பூரணலிங்கம் அறிவு மிகுந்தவராக மட்டுமின்றி அடக்க முடையவராகவும் இருந்தார். எனவே அவ்வுரை நூலை எழுதியவர் தாமே என்பதை எவரிடமும் அவர் சொல்லவில்லை: அதே கல்லூரியில் அவர் பட்டப் படிப்பை முடித்து வெளியில் வரும்பொழுது நடந்த கல்லூரி ஆண்டு விழாவில் தான், அவ் விரிவுரை நூல் தம்மால் எழுதப் பட்டதாகக் கூறினராம்.

என்னே அவர் அறிவு! என்னே அவர் அடக்கம்! சிறுவர்களே, இத்தகைய அறிவையும் அடக்கத்தையும் நீங்கள் பெற வேண்டாவா ?

## திருத்தம்.

13–ஆம் பக்கம் – சிறுவர் பெயர் வரிசையில் உள்ள கால்லாடன் என்பதைக் கல்லாடன் என்று திருத்திப் படிக்கவும்.




குழந்தைகளுக்கு:

# குழந்தை!

துரை-மாணிக்கம்

குழந்தை இங்கே வா!
கொஞ்சி முத்தம் தா!

பாலுஞ் சோறும் உண்ணு!
பத்து வரையில் எண்ணு!

அ ஆ இ ஈ என்றே
அப்பா வந்தால் சொல்லு!

பட்டுச் சட்டை தைப்பார்!
பதக்கம் வாங்கி வைப்பார்!

முத்துப் பல்லைக் காட்டு!
முன்னங் கையை நீட்டு!

சோற்றை வாயில் போடு!
சுவையாய்ப் பாடி ஆடு!

———:o:———

சிறுவர்க்கு:

# மலர் !

துரை-மாணிக்கம்

செடியில், கொடியில்
மரத்தில் பூப்பாய்
மலரே! மலரே! மலரே! – உன்
சிரிப்பில் உள்ளம்
மகிழா தவர்கள்
இலரே! இலரே! இலரே!

விடியற் காலை
வீதிகள் எங்கும்
மணமே! மணமே! மணமே! — நீ
வீசு கின்ருய்!
என்னே உன்றன்
குணமே! குணமே! குணமே!

புவியில் உன்னைப்
போற்றி மகிழ்ந்தார்!
பூவே! பூவே! பூவே! – உன்னைப்
புலவர் யாரும்
பாடி மகிழ்ந்தார்
பாவே! பாவே! பாவே!

குவியல் குவிய
லாப் பூத்தாய்!
கோடி! கோடி! கோடி! -உன்னைக்
குலவிக் கொஞ்சத்
தும்பிகள் வருமே
நாடி! நாடி! நாடி!

வெள்ளை, மஞ்சள்,
நீலம், சிவப்பு
வண்ணம்! வண்ணம்! வண்ணம்!—உன்னை
விரும்பிச் சூடாப்
பெண்கள் இல்லை;
திண்ணம்! திண்ணம்! திண்ணம்!

பிள்ளைகள் முதலாப்
பெரியோர் வரையில்
உன்னை உன்னை, உன்னை— என்றும்
பேணி மகிழ்வார்!
பறிக்கச் செய்தாய்
என்னை! என்னை! என்னை!

—

# ஊஞ்சலாட்டம்

ம. இலெ. தங்கப்பா

ஊஞ்சல் ஊஞ்சல் ஊஞ்சலாம்!
உயரத் தொங்கும் ஊஞ்சலாம்!
மாஞ்சோ லைக்குள் ஊஞ்சலாம்!
மகிழ்வாய் ஆட வாருங்கள்!

தோப்புக் குள்ளே ஊஞ்சலாம்;
தொட்டில் போல ஊஞ்சலாம்!
பாப்பா ஏறும் ஊஞ்சலாம்!
பையப் பைய ஆட்டுங்கள்!

ஊஞ்சல் ஏறி ஆடுவோம்;
முன்னும் பின்னும் சாடுவோம்;
சேர்ந்து பாட்டுப் பாடுவோம்;
சிரித்து விளை யாடு வோம்!

—

# உங்கள் பெயரைத்

# தூய தமிழ்ப் பெயராக மாற்றி

## வைத்துக்கொள்ளுங்கள்.

---:o:---

சிறுவர் சிறுமியர்களே! உங்களில் சிலர்க்கு உங்கள் பெற்றோரால் மிக நீளமான பெயர்கள் வைக்கப்பட்டிருக்கும். உங்களில் சிலருக்கு உங்களுடைய பெயர்களுக்குப் பொருள் விளங்காமல் இருக்கும்; உங்களுக்கு மட்டும் இன்றி, உங்களுக்கு அப்பெயர்களை வைத்த பெரியவர்களுக்கும் அவை விளங்காமல் இருக்கும். காரணம் அவை தமிழச் சொற்களாக இருக்காமல் இருக்கும். சமசுக்கிருதச் சொற்களாகவோ, வேறு மொழிச் சொற்களாகவோ அவை இருக்கும். இருந்தாலும் அவற்றைப் பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்பட்டிருக்க மாட்டீர்கள். "தாய் தந்தையர்கள் வைத்த பெயர்கள் தாமே; அவர்கள் தெரியாமலா வைத்திருப்பார்கள்; சரியாகத்தான் வைத்திருப்பார்கள்" என்றெல்லாம் நம்பி யிருப்பீர்கள். ஆனால் அப்பெயர்கள் உங்கள் தாய்தந்தையர்கள் வைத்திருக்கமாட்டார்கள். அக்கம் பக்கத்தில் உள்ள பெரியவர்களோ, கணியர்(சோதிடர்)களோ தாம் அப்பெயர்களை வைத்திருப்பார்கள். அப்படி வைக்கப் பெற்ற பெயர்களில் சில நல்ல பெயர்களாகவும், அழைப்பதற்கு எளிதானவையாகவும், சில தூய தமிழ்ப் பெயர்களாகவும் அமைந்துவிடுவதுண்டு. ஆனால் பலவோ, மிகவும் அருவருப்பான பெயர்களாகவும், இழிவான பொருள்தரும் பெயர்களாகவும் இருக்கும். அவை தமிழில் இல்லாமல் இருப்பதால், அவற்றைப்பற்றி உங்கள் பெற்றோரும் அறிந்திருக்க மாட்டார்கள். நீங்களும் அறிந்திருக்க மாட்டீர்கள்.

கல்வியறிவில்லாத பெற்றோர்கள் சிலர் தங்கள் பிள்ளைகளுக்குப் பாவாடை, மண்ணாங்கட்டி, தலையாரி, பக்கிரி என்றெல்லாம் இழிவான

பெயர்களை வைத்து விடுவதுண்டு. அவர்களும் தங்கள் அம்மான், அப்பன் வைத்த பெயர்கள் ஆயிற்றே, அவற்றை எப்படிக் குறை சொல்வது என்று அப்பெயர்களாலேயே தங்களை அழைத்துக் கொள் வார்கள். 'அவற்றை மாற்றவே முடியாது; பிறந்த பிறவியே அப் படித்தான்'' என்று அவர்கள் குருட்டுத்தனமாக நம்பியும் விடுகின்றார் கள். இவர்களுடைய தாய் தந்தையர்களைக் கேட்டால், ''அப்பெயர்கள் எல்லாம் கடவுளின் பெயர்கள் என்றும், அவற்றைப் பழிக்கவோ மாற் றவோ செய்தால் அப்பெயரையுடைய தெய்வங்கள் தங்களைத் தண் டித்து விடும்''என்றும் அச்சத்துடனும் அறியாமையுடனும் கூறுவார் கள். பிள்ளைகளும் சரியென்று இருந்து விடுவார்கள்.

இனி, இவர்களைவிடக் கல்வியறிவிலும், செல்வத்திலும் தங்களை உயர்ந்தவர்கள் என்று கருதிக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் சிலர் தங்கள் பிள்ளைகளுக்குக் கேசவன், கோபாலன், பூவராகன் என்றெல் லாம் பெயர்கள் சூட்டியிருப்பார்கள். அவை தெய்வங்களின்பெயர்கள் என்றும் கூறி மகிழ்வார்கள். தெய்வங்களுக்கும் இவர்கள்தாமே பெயர்களை வைத்தார்கள்? எவருடைய பெயர்களானாலும் எவர் வைத் தாலும் அப்பெயர்களின் பொருளும், அவை அழைப்பதற்குச் சிறந்தன வாகவும், அழகாகவும் இருக்க வேண்டாவா? கேசம் என்றால் மயிர். கேசவன் என்றால் மயிரை உடையவன்–மயிரான்– என்றே பொருள். அதுபோல் கோபாலன் என்றால் மாடுமேய்ப்பவன் என்றும்,பூவராகன் என்றால் நிலப் பன்றி என்றும் பொருள்படும். இப்பெயர்கள் எல்லாம் நமக்கே நன்றாக இல்லை என்றால், தெய்வங்களுக்கு வைத்தால் மட்டும் நன்றாகவா இருக்கும்? மேலும் இப்பெயர்களெல்லாம் வடமொழிப் பெயர்கள். இவை வடமொழியில் இருப்பதால்தான் பொருளும் விளங்க வில்லை. பொருள் தெரிந்தால் ஒருவேளை வைத்திருக்க மாட்டார்கள்.

இனி, மேற்சொன்னவர்களைவிடத் தங்களை மிகவும் பெரியவர்கள் என்றும் உயர்ந்த நாகரிகம் வாய்ந்தவர்கள் என்றும் கருதிப் பெரு

மைப்பட்டுக் கொள்ளும் சிலர், தங்கள் பிள்ளைகளுக்கு நரேஷ் என்றும், சுரேஷ் என்றும், மகேஸ்வர் என்றும், கோமளம் என்றும், கோகிலம் என்றும், பத்மாவதி என்றும், மீனாட்சி என்றும் பலவாறு வடமொழிப் பெயர்களை வைத்து, இக்கால நாகரிகத்துக்குத் தக்கவர்கள் என்று கூறிக்கொண்டு திரிவார்கள். இப்பெயர்கள் நல்ல பொருள்களைத் தந்தாலும், அவற்றின் பொருள்கள் அவர்களுக்கும் புரியாதனவாகவே இருக்கும். அவற்றைத் தமிழாக மாற்றி இறைவன் என்றும் அழகி என்றும், குயிலி என்றும் தாமரை என்றும், கயற்கண்ணி என்றும் வைத்தால் அவையே அழகாகவும், மகிழ்ச்சி தருவனவாகவும் இருக்கு மன்றோ? நமக்குப் புரியாத மொழிகளில் பெயர்களை வைத்து விடுவதே நாகரிகமும் அறிவும் ஆகி விடுமா?

எனவே, நீங்கள் உங்களுக்கு வைக்கப்பெற்ற பெயர்கள் தூயதமிழ்ப் பெயர்களா என்பதையும், அவை நல்ல பொருள் தருவனவாகவும் அழகானவையாகவும் இருக்கின்றனவா என்றும் அறிந்து கொள்ளுங்கள். ஏற்கனவே பெரியவர்களால் உங்களுக்கு வடமொழிப் பெயர்கள் வைக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றி வைத்துக் கொள்ளுங்கள். இம் முயற்சிக்கு உங்கள் தமிழாசிரியர்களும், அண்டை அயலில் உள்ள தமிழ் அன்பர்களும் துணை புரிவார்கள். அப்படி யாரும் துணை புரியவில்லை என்றால் 'தமிழ்ச்சிட்டு'க்கு எழுதுங்கள். நாங்கள் நல்ல பெயர்களாக எழுதி அனுப்புகின்றோம்.

"பெயர்களில் என்ன இருக்கின்றது; அவை எப்படியிருந்தால்தாம் என்ன?" என்று சோம்பேறிகள் சிலரும், கெட்ட எண்ணக்காரர் சிலரும் உங்கள் அருகே இருந்து உங்களுக்கு அறிவு(!) சொல்லக்கூடும். அப்படிப்பட்டவர்களைத் துணிந்து மரக்கட்டைகள் என்றும், கோட்டான்கள் என்றும், காக்கை என்றும், குரங்கு என்றும் கூப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுது தெரியும் அப்பெயர்களில் என்ன இருக்கின்றது என்று. நல்ல அழகிய பெயர்களைக் கூப்பிடக் கூப்பிட அந்தப்

பெயர்களையுடையவர்களும் சில நல்ல தன்மைகளை அடைகின்றனர்கள் என்பது மனவியல் உண்மை. கழுதை கத்தும்பொழுது நம் உள்ளம் அமைதியிழக்கின்றது. குயில் கூவும்பொழுது நம் உள்ளம் மகிழ்கின்றது. ஏன் தெரியுமா? நல்ல ஒலிகள் நல்ல விளைவையே உண்டு பண்ணுகின்றன. எனவே அத்தகைய வம்புக்காரர்களைப்பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டா.

உங்களுக்குத் தேவையான தூய, அழகிய தமிழ்ப் பெயர்கள் சில கீழே தரப்பெற்றுள்ளன. அவற்றில் உங்களுக்கு அழகாகவும், பொருத்தமாகவும், விருப்பமாகவும் இருக்கின்ற பெயர்களை நீங்கள் தேர்ந்தெடுத்து அவற்றையே இனிமேல் எல்லாரையும் அழைக்கும்படி கூறிவிடுங்கள். பள்ளிகளில் கூட உங்கள் பழைய பெயர்களை மாற்றித்தரச் சட்டம் இருக்கின்றது. எனவே பள்ளிப் பெயர்களைக்கூட நீங்கள் மாற்றிக் கொள்ளுவதே நல்லது; சிறந்தது; பாராட்டத்தக்கது. இனி வரப்போகும் காலத்தில் தமிழ்ப்பற்று மிகுந்திருக்கும். அக்கால் உங்கள் பெயர்களும் தூயதமிழில் இருப்பதைத்தான் அப்பொழுதுள்ள அனைவரும் விரும்புவர். அதன் பொருட்டு நீங்கள் இப்பொழுதே உங்கள் பெயர்களை மாற்றி வைத்துக் கொள்வதுதான் நல்லது. உங்கள் பெயர்கள் ஏற்கனவே நல்ல தமிழ்ப் பெயராகவும், அழகான பெயராகவும் இருக்குமானால் உங்கள்பெயரை மாற்றிக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் உங்கள் நண்பனின் பெயர் அப்படியிருந்தால் நீங்கள் அவன் பெயரை மாற்றி வைத்துக்கொள்ள உதவி புரியுங்கள். இந்தக் கட்டுரையைப் படித்து நீங்கள் உங்கள் பெயரை மாற்றிக் கொண்டால், உங்கள் பழைய பெயருடன் நீங்கள் புதிதாக வைத்துக்கொண்ட பெயரையும் எழுதி அப் பெயர் மாற்றத்திற்கு உதவிய பெரியவர்களின் பெயர்களையும் தமிழ்ச்சிட்டிற்கு ஓர் அஞ்சல் அட்டையில் எழுதிப் போடுங்கள். 'சிட்டு' உங்களின் பெயர்களை எல்லாருக்கும் இசைத்துக் காட்டும்.

சிறுவர்க்குரிய சில நல்ல பெயர்கள்: அருள்மொழி, அறிவழகன், அறவாழி, ஆண்டகை, இசைமணி, இளங்கிரன், இளந்திரையன், இரும்பொறை, கபிலன், கதிரொளி, கழராம்பன், தால்லாடன், செந்தமிழ், செம்பியன், செழியன், சேந்தன், சேரன், சேரல், தமிழநம்பி, தோன்றல், நக்கிரன், நந்நாகன், நாவுக்கரசன், நெடுங்கிள்ளி, நெடுமாறன், பனம்பாரன், பெருவழுதி, பொருநன், பொய்யாமொழி பொழிலன், பொறையன், மகிழ்நன், மணிமொழி, மருள்நீக்கி, மலையன், மள்ளன், மறைக்கடல், மறைமலை, மாகுன்றன், மாவலி, மாறன்வழுதி, முத்தமிழ் முழக்கி, மெய்ம்மொழி, முருகுமாமலை, தமிழ்வென்றி, வழுதி வெண்கொற்றன், மோசிகீரன், கழாத்தலை, நலங்கிள்ளி, நெடுமல் யாக்கை, பாண்டியன், வெளிமான், செங்கதிர், எழிலன், பூங்குன்றன், இறைக்குருவன், சேயோன், அமிழ்தமொழி, மணி மார்பன்.

சிறுமியர்களுக்குரிய சில நல்ல பெயர்கள்: அமிழ்தமொழி, அரசியற்கரசி, அம்மைமணி, அரிவை, அருளரசி, அறவல்லி, அறிவுடைநங்கை, ஆடல்வல்லி, ஆயிழை, இசைமொழி, இளவெயினி, இளம்பிறை, இளமை நாச்சி, உலகம்மை, எழிலி, ஏழிசைவல்லி, ஏலக்குழலி, ஒப்பிலாமணி, ஒளிவடிவு, ஓவியப்பாவை, கன்னல்மொழி, கயல்விழி, கருங்குழலி, கற்புக்கொடி, கன்னிவிளக்கு, காக்கைபாடினி, காதார்குழலி, கிள்ளைமொழி, குயின்மொழி, கோதை, கொடியுடற்செல்வி, கோவையிதழ், சுரும்பார்குழலி, செந்தமிழ், செந்தாழை, செந்தாமரை, செல்வத்திரு, செவ்வல்லி, சேயிழை, சேல்விழி, தமிழ்மணி, தமிழ்வல்லி, தாயம்மை, தாழ்குழல், திருவாய்மொழி, துடியிடை, தேன்மொழி, நக்கண்ணை, நங்கையர்க்கரசி, நீனெடுங்கண்ணி, நுண்ணிடை, பைங்கிளி, பணிமொழி, பால்விழி, பிறைநுதல், பொற்கொடி, பூங்குழல், மலர்க்குழல், மயில்விழி, மல்லிகை, மாதரி, மான்விழி, முத்துநகை, மெய்யம்மை, யாழ்மொழி, வடிவம்மை, முத்துவளை, விளங்கிழை, வேண்மாள், வேல்விழி, ஔவை, நப்பசலை, நொச்சிமெய், பொற்சிலம்பி.

O



# குட்டிக்கதை

## கடமை தவறாதவனே பெரியவன்!

அமெரிக்காவின் தலைவர் ஆபிரகாம் இலிங்கன் ஒரு சிற்றூர்க்கு வருவதாக இருந்தது. அவரை வரவேற்க மக்கள் எல்லாரும் ஏராளமான மாலைகளுடன் அவர் வரும் வழியில் காத்து நின்றனர். மக்கள் தலைவரைப் பார்ப்பதற்காகச் சிறுவர்களும் பெரியவர்களுமாக வழி நெடுகக் கூடியிருந்தனர். ஊரே திருவிழாப் போல மகிழ்ச்சி ஆரவாரத்தோடு அழகு படுத்தப் பட்டிருந்தது. தொழிலாளிகளும், உழைப்பாளிகளும் தங்கள் தங்கள் மனைவி மக்களுடன் பாதை ஓரங்களில் கூடி ஆபிரகாம் இலிங்கனின் புகழைப்பற்றிப் பேசியவாறு அவர் வருகைக்குக் காத்திருந்தனர். காவலர்களும் படை மறவர்களும் மக்களை அப்பொழுதைக்கப்பொழுது அமைதிப்படுத்திக் கொண்டிருந்தனர். ஊரிலுள்ள செல்வர்களும், பெரிய பெரிய அதிகாரிகளும் தனித்தனி வண்டிகளில் அமர்ந்து இலிங்கனை எதிர்கொண்டழைக்கச் சென்றனர்.

இறுதியாக எல்லாரும் எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஆபிரகாம் இலிங்கன் வந்தார். கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு அவரைப் பார்க்க முனைந்தது. இலிங்கன் எல்லாரும் பார்க்கும் அளவிற்கு இருக்கையிலிருந்து எழுந்து நின்றபடியே வந்துகொண்டிருந்தார். அவர் கூட்டங்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தார். அவர் வரும் வரைக்கும் தங்கள் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள்கூட, அவர் வருவதைக் கேட்டுத் தங்கள் தங்கள் வேலைகளை அப்படியப்படியே விட்டு விட்டு ஓடிவந்து பாதை ஓரங்களில் நின்று வேடிக்கை பார்த்தனர்.

இலிங்கன் எல்லாரையும் பார்த்துக்கொண்டேவருகையில்,தொலைவில் உள்ள வயல்களில் உழுது கொண்டுள்ள உழவர்கள் தம்மைப் பார்க்க ஓடிவருவது தெரிந்தது. அவர்கள் தாங்கள் உழுது கொண்டிருந்த ஏர்களை அப்படி அப்படியே நிறுத்தி வைத்துவிட்டு வந்தனர். ஆனால் அவர்களில் ஒருவன் மட்டும் இவர் வருகையைப் பற்றிக் கவலைப்படாத வன்போல் தான் உழுவதை நிறுத்தாமல், தொடர்ந்து வேலையில் ஈடு பட்டுக் கொண்டிருந்தான். பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த அவனுடைய நண்பர்கள் ஓடிவந்ததைக்கூட அவன் பொருட்படுத்திய தாகத் தெரியவில்லை. ஆபிரகாம் இலிங்கன் இதைப் பார்த்தார். உடனே தன் வண்டி ஓட்டியிடம் வண்டியை நிறுத்துமாறு கட்டளை இட்டார். வண்டி நின்றது. வண்டிக்குள்ளிருந்து இலிங்கன் தாவி வெளியே குதித்துக், கூட்டத்தைப் பிளந்து கொண்டு தன்னந்தனி யாக உழுது கொண்டிருக்கும் அவ்வுழவனிடம் நடந்து போனார். அதி கரிகளும் காவலர்களும் அவர் பின்னாலேயே ஓடினர். மக்களும் இவரின் செய்கை புரியாமல் விழித்தனர்.

ஆபிரகாம் இலிங்கன் நேரே அவ்வுழவனிடம் வந்தார். வந்தவர் அவனை மகிழ்ச்சியோடு தட்டிக்கொடுத்து, "அப்பா, இத்தனைபேரும் அவரவர் கடமைகளைக் கூட விட்டுவிட்டு, என்னைப் பார்க்க வந்தனர். ஆனால் நீயோ என்னையும்கூடப் பொருட்படுத்தாமல் உன் கடமையி லேயே கண்ணாக இருக்கின்றாய். உண்மையில் என்னைவிட நீயே பெரியவன். அதனாலேயே உன்னைப் பார்ப்பதற்கு நானே இங்கு வந் தேன்" என்று அன்பு கனியச் சொன்னார். அவ்வுழவனோ அன்பால் கட்டுண்டு, கண்களில் கண்ணீர் மல்க அவரை வணங்கினான். இலிங்கன் தனக்கிட்ட மாலைகளில் ஒன்றை அவனுக்கிட்டு அவன் கடமை உணர்ச்சியைப் பாராட்டினார்.

உண்மையில் கடமை தவறாதவனே எல்லாரினும் மேலானவன் என்பது இந் நிகழ்ச்சியால் புலப்படுகின்ற தன்றோ? O




O சென்ற மாதப் புதிர் 1–இன் விடை:

| | 3 கொட்டைப் பழம். | 2 கொட்டைப் பழம். | 1 கொட்டைப் பழம். | மொத்தக் கொட்டைகள். |
|---|---|---|---|---|
| பாரி. | 3 | 4 | 3 | 20 |
| காரி. | 4 | 2 | 4 | 20 |
| ஓரி. | 3 | 4 | 3 | 20 |
| மொத்தப் பழங்கள். | 10 | 10 | 10 | |

O புதிர் 2–இன் விடை.

முதல் துண்டில் உள்ள எண்கள்: 11, 12, 1, 2.
2–ஆம் ,, ,, ,, : 10, 9, 3, 4.
3–ஆம் ,, ,, ,, : 8, 7, 6, 5.

இம் மாதப் புதிர்.

சென்ற மாதம் வந்த பனம்பழப் புதிர் போலவே இம்மாதமும் ஒரு புதிரை தம்பி ஒருவன் போட்டிருக்கின்றான்.

மாறன், வழுதி, பாண்டியன் என்ற மூவருக்கும் சொந்தமான ஒரு தோட்டம் இருந்தது. அதில் அம் மூவரும் சேர்ந்து வாழைக் கன்றுகளை நட்டுத் தண்ணீர் ஊற்றி வந்தனர். நாளடைவில் வாழை மரங்கள் பெரியனவாகி அவற்றுள் 30 மரங்கள் குலை தள்ளின. இருப்பினும் 30 குலைகளும் ஒன்றுபோலவே இல்லை. அவற்றில் 10 குலைகளில் மூன்று மூன்று சீப்புகளும், வேறு 10 குலைகளில் ஐந்து ஐந்து சீப்புகளும், கடைசி 10 குலைகளில் பத்து பத்து சீப்புகளும் இருந்தன. ஆகமொத்தம் 30 குலைகளும், 180 சீப்புகளும் ஆகும். ஒவ்வொரு சீப்பிலும் பத்துப் பத்து காய்களே இருந்தன.

மாறன், வழுதி, பாண்டியன் மூவரும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளாமல் சமமாகக் காய்களையும் சீப்புக்களையும், குலைகளையும் பிரித்துக் கொள்ள விரும்பினர். அவர்கள் கணக்குப்படி ஒவ்வொருவருக்கும் 10 குலைகளும் 60 சீப்புகளும் வரவேண்டும். குலைகளில் உள்ள சீப்புகளையோ, சீப்புகளில் உள்ள காய்களையோ வெட்டக் கூடாது என்பது அவர்கள் கொள்கை

அவர்கள் மூவரும் தங்களுக்குள் தாங்களே பங்கிட்டுக் கொள்ளத் தெரியாமல் விழிக்கின்றார்கள். எங்கே உங்களுக்குத் தெரிகின்றதா என்று பாருங்கள்.

இப்புதிரைப் போட்டிருக்கும் தம்பி மு. இராதகிருட்டிணன்.
கரையாம்புத்தூர், சொர்ணவூர் (அஞ்) தெ. ஆ.

விடை அடுத்த இதழில்.




O கடந்த திங்கள் தமிழ்ச்சிட்டில் பாடல்கள் வேறுபட்டனவாய் இருக்கக்கண்டு வியப்பில் ஆழ்ந்தேன். 'கூன்விழுந்த பாட்டி குட்டைக்காலை நீட்டி' என்ற பாட்டை, என் தங்கை அடிக்கடி பாடத் தொடங்கிவிட்டதன்றிக் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கத் தொடங்கிவிட்டதைக் கண்டேன். வேடிக்கையும் விளையாட்டுத்தனமும் நிறைந்த பாடல்களையே சிறுவர் விரும்பு கின்றனர் போலும்...! எனினும் தமிழின் வளர்ச்சி கருதுமட்டில் அருகலாக உள்ள பழைய - புதிய தமிழ்ச்சொற்களைப் பாடல் களில் திணித்து! அறிமுகப்படுத்துதலையும் நான் விரும்புகிறேன்.

மு. மகிழரசன். 17. சிவ்சண்முகம்பிள்ளை தெரு, சென்னை–34.

O தனித்தமிழ்ச் சிட்டே! தமிழ்மலர் மொட்டே! பறந்துவா கிட்டே. படிப்பேன்! மகிழ்வேன் தொட்டே! உன்னைக் கண்டநாள்முதலா உறக்கமில்லை இன்றுவரை. தேன்சிட்டாகப் பறந்துவர விரும்பு கின்றேனே நாள்தோறும்!

ச. குலோத்துங்கன். சுண்ணும்பு பாளையம், தரங்கம்பாடி.

O தங்களால் திங்கள்தோறும் வெளியிடப்பெறும் 'தமிழ்ச்சிட்டு' சிறுவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. பாடல்கள் சில சிறுவர்களுக்குரிய முறையில் சிறுசிறு அளவினதாக வெளியிட் டால் நலமாய் இருக்கும். 'ஆபிரகாம் இலிங்கன்' போன்ற சிறு கதைகளே அன்றி, வேறு அறிவு வளர்ச்சிக்குரிய கதைகளைத் திங்கள்தோறும் வெளியிட்டால் சிறுவர்கள் மகிழ்ச்சி அடை வார்கள். இயன்றதைச் செய்க!

புலவர். தி. ந. பாலன். தமிழாசிரியர். அ. உ. பள்ளி, தென்னேரி.

(ஐயா, உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராக விருக்கும் உங்களைப் போன்றவர்கள் மாணவர்களுக்குரிய அறிவுச் சிறுகதைகளை எழுதி வெளியிடின் அவற்றை அன்புடன் வெளியிடுகின்றோம். மாணவர்கள் எவற்றை விரும்பிப் படிக்கின்றனர் என்பதைத் தங்கள் போன்றவர்களே மிகுதியும் உணரமுடியும்! எனவே ஓய்வு நேரங்களில் மாணவர்க்குத் தேவையான பகுதிகளை எழுதி அனுப்புங்கள்

–ஆசிரியர் )

# மாணவர்க்கான மணி மொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே .

* உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது. அதனை மலரச் செய்வதே வாழ்க்கை என அறிந்துகொள்ளுங்கள்.

* ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தவறாமல் கடைப்பிடியுங்கள்.

* நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித்தாள்களையும் படிப்பதை வழக்கமாக்க் கொள்ளுங்கள்.

* பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர்களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய்யுங்கள்.

* நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப்படங்களில் வீணாக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

* எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.

* பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.

* உங்கள் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.

* சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதிலும் இன்பம் காணுங்கள்.

* இறுதியாக உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயகமாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.